## திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம் வழங்கும் இலக்கியப் பதாகை (பறப்பு-6)

''பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும், உறுதியும், தியாக உணர்வும் வேண்டும்'' என்ற ஈ.வே.ரா (பெரியார்) அவர்களின் கூற்றிற்கு இலக்கணமாய் வாழ்ந்தவர் திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார். அவரின் நினைவாக, விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்குட்பட்ட ஆறுபடைவீடு தொழிற்நுட்ப வளாகம் - கலை மற்றும் அறிவியல் புலம் - தமிழ்த்துறை சார்பில் ஆறாம் நிகழ்வாக அக்டோபர் 26 ஆம் தேதி இலக்கியப்பதாகை பறப்பு – 6 நிகழ்வு நடந்தேறியது.

இயல்,இசை,நாடகம் என்ற முத்தமிழின் முக்கனிச் சாற்றினை "முத்தமிழின் சுவையும் மேன்மையும்" என்ற தலைப்பில் காரைக்குடி M.S. ராமநாதன் (தமிழ் செழு மாமுகில், சந்தக்கவிஞர், நகைச்சுவை அரசு, இன்னிசை இளவல்) அவர்கள் திறம்பட மாணவர்களிடம் உரையாற்றினார். இலக்கியங்களை வகைப்படுத்தி, தொகைப்படுத்தி தம் இன்னிசையால் பாடி, நாடக பாங்குற முகபாவனைகளை மாற்றி, ஒரு கலை நிகழ்வை நிகழ்த்தி காட்டினார். இக்காலத்திற்கு பொருந்தும் நகைச்சுவை நிகழ்வுகளை படித்தும், நடித்தும் காட்டினார். அகத்தியரால் கண்டுபிடிக்கப்பட்ட மின்சாரம், தமிழின் மேன்மை, தேவாரம், திருவாசகம், பக்தி இலக்கியப்பாடல்கள், நாட்டுப்புறக்கதைகள், இன்றைய நடைமுறை நகைச்சுவைக் கதைகள் மற்றும் தம் வாழ்வின் அனுபவங்களிலிருந்து பெற்ற செய்திகள், தம் சொற்பொழிவின் அனுபவங்கள் போன்றவற்றினை அழகுற சிறப்புரை ஆற்றினார். மாணவர்களும் மிக ஆர்வத்துடன் இவரின் நகைச்சுவையினை ரசித்தும், சிரித்தும் மகிழ்ந்தனர்.

தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும், ஆதரவையும் மேதகு டாக்டர் அ.ச.கணேசன் (வேந்தர்), டாக்டர் அனுராதா கணேசன் (இயக்குநர்) அவர்கள் அளித்தனர்.

மதுரை கவிஞர் மார்சல் முருகன் அவர்கள், சிறப்பு விருந்தினர் காரைக்குடி M.S. ராமநாதன் அவர்களை அறிமுகப்படுத்தி

பேசிய போது, அவரின் சிறப்பு பட்டப்பெயர்களைக் கூறி, தாமும் நகைச்சுவையாய் பேசி மாணவர்களை மகிழ்வுபடுத்தினார்.

உயிரியல் துறைத்தலைவர் கிரி ரங்கசாமி அம்மையார் அவர்கள் வாழ்த்துரை வழங்கும் போது தம் வாழ்வின் அனுபங்களை பகிர்ந்து கொண்டு தமிழ் மீது உள்ள தம் பற்றினை எடுத்தியம்பினார்.

தலைமை பொறுப்பாளர் இயங்குமுறை திரு.சீனிவாசன் திருநாவுக்கரசு அவர்கள் மணிமொழியனார் முத்தமிழாய வளர்ச்சியினை பாராட்டிப் பேசி, பல சான்றோர், அறிஞர் பெருமக்களை அழைத்து வந்து இன்னும் பல இலக்கியப்பணிகளை செய்ய வேண்டும் என வாழ்த்துரை வழங்கினார்.

முதன்மை கல்வி அதிகாரி முனைவர் மு.பொன்னவைக்கோ அவர்கள் தமிழின் படிப்படியான வளர்ச்சி நிகழ்வுகளைக்கூறி, விலங்குகளுக்கு எதனால் பெயர் வந்தது என்றும், காக்கா, கிளி, குதிரை, குரங்கின் பெயர்க்காரணங்களைக் கூறி நிறைவுரை ஆற்றினார்.

முனைவர் ஆர்.சண்முகவள்ளி (இயக்குநர்) கலை மற்றும் அறிவியல் புலம் அவர்கள் தமிழ் மொழியின் மாண்பினை எடுத்தியம்பி மாணவர்களை ஊக்கப்படுத்தி வாழ்த்துரை வழங்கினார். நன்றியுரையை முனைவர் ப.ஜெயபாரதி (தமிழ்த்துறை தலைவர்) அவர்கள் வழங்கினார்.

தமிழ்த்துறை சார்பில் முனைவர் ப.ஜெயபாரதி (துறைத்தலைவர்), திரு.அ.முத்துக்குமார் (உதவிப்பேராசிரியர்) ஆகியோர் விழா ஏற்பாடு செய்துயிருந்தனர்.

இவ்விழா, மாணவ மாணவிகள், அனைத்து துறை சார்ந்த பேராசிரியர்கள், மற்றும் அலுவலக ஊழியர்களின் நல் ஆதரவுடன் இனிதே நடைபெற்றது.